# திருக்குறள்

மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்.

## விளக்கம்:-

ஒருவர் மீது உள்ள கோபத்தை மறந்து விட வேண்டும். இல்லையென்றால் அக்கோபமனது தீய செயல்களை செய்ய தூண்டுவதாக அமையும்.

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்

வானகமும் ஆற்றல் அரிது.

**விளக்கம்:-**

நாம் மற்றவர்களுக்கு எந்த உதவியும் செய்யாமல் இருந்தாலும் நமக்கு உதவி தேவைப்படும் நேரத்தில் வந்து உதவி செய்தால் அதற்கு எத்தனை முறை நன்றி சொன்னாலும் நிகராகாது.

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது.

## விளக்கம்:-

எந்த உதவியும் மற்றவர்களிடமிருந்து எதிர் பார்க்காமல் நாம் அவர்களின் மீது கொண்டுள்ள அன்பின் காரணமாகசெய்ய வேண்டும். அவ்வாறு நாம் செய்யும் உதவி கடலை விடப் பெரியது.

உதவி வரைத்தன்று உதவி உதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

**விளக்கம்**:-

உதவி என்பது, செய்யப்படும் அளவைப் பொருத்து சிறப்படைவதில்லை. அந்த உதவியைப் பெறுபவரின் பண்பைப் பொறுத்தே அதன் அளவு மதிப்பிடப்படும்.

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்

சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

**விளக்கம்**:-

தம் ஐம்புலன்களையும் அடக்கி ஆழ வேண்டும். அல்லது நாக்கு ஒன்றையாவது அடக்கி ஆழ வேண்டும். இல்லையென்றால் சொற்குற்றம் ஏற்பட்டு துன்புற நேரிடும்.